**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED CLUSTER MINES (2 NOS) OF GREY GRANITE QUARRIES NAMELY 1) M/S. EVERKING GRANITES, S.F.NO. 347/1, 347/2, 347/4, 347/5, 348/4, 348/5, 348/6B1, 348/6C & 348/6D1 LEASE OVER AN EXTENT OF 3.19.5 HA LOCATED AT JAGADEVIPALAYAM VILLAGE, BARGUR TALUK, KRISHNAGIRI DISTRICT AND 2) THIRU.E. JAGADESSAN GREY GRANITE QUARRY, S.F. NO: 353/2A1B, 2A7, 2B, 2C1 & 2E1A, LEASE OVER AN EXTENT OF 1.56.5 HA LOCATED AT JAGADEVIPALAYAM VILLAGE, BARGUR TALUK, KRISHNAGIRI DISTRICT ON 26.10.2023 AT 11.00 AM AT M/S. SRI MAHESHWARI MAHAL, D.NO. 1/190, NH-77, THIRUVANAMALLI MAIN ROAD, ANCHOOR VILLAGE, BARGUR TALUK, KRISHNAGIRI DISTRICT.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru. S. Sundara Rajan | : | Deputy Collector, Krishnagiri District. (Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. R. Venkatesan., M.E., | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District. |
| 3 | Er. K. Ganesan., M.Tech., | : | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 4 | Er. T. Senthil Kumar., M.Tech., | : | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 5 | Thiru. Jalal Uddin | | The Proponent M/s. Everking Granites |
| 6 | Thiru. Jagadeesan | : | The Proponent M/s. Thiru. E. Jagadessan Grey Granite Quarry |

| | | | |
|---|---|---|---|
| 8 | Thiru. M. Venkatesh Prabhu | : | EIA Consultant,<br>M/s. Aaadhi Boomi Mining & Enviro Tech Pvt Ltd, Salem |
| | Public | : | 58 Nos. (List enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Deputy Collector, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed projects of Grey Granite quarries of 1) M/s. Everking Granites, S.F.No. 347/1, 347/2, 347/4, 347/5, 348/4, 348/5, 348/6B1, 348/6C & 348/6D1 lease over an Extent of 3.19.5 Ha located at Jagadevipalayam Village, Bargur Taluk, Krishnagiri District and 2) Thiru.E. Jagadessan Grey Granite Quarry, S.F. No: 353/2A1B, 2A7, 2B, 2C1 & 2E1A, lease over an Extent of 1.56.5 Ha located at Jagadevipalayam Village, Bargur Taluk, Krishnagiri District are required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as "Dinathanthi" and "The New Indian Express" dated 22.09.2023 and bit notices regarding public hearing was issued to the public of Thannirpallam village, Srinivasapuram village, Jagadevi village and Bagimanur village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Deputy Collector, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Deputy Collector, Krishnagiri has requested the project proponent to explain about their proposed Grey Granite quarry projects through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru. M. Venkatesh Prabhu, EIA Consultant, M/s. Aaadhi Boomi Mining Enviro Tech Pvt Ltd, Salem of the proposed Grey Granite quarry projects has made presentation about the proposed Grey Granite quarry projects to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed Grey Granite quarry projects. The views and suggestions of the public are detailed below:

**1. Thiru. Murugesan, Jagadevipalayam Village:**

Thiru. Murugesan has said that, there is no problem with this proposed quarry project and the employment opportunities will be generated through this quarry project.

**2. Thiru. Damodaran, Bagimanur Village:**

Thiru. Damodaran has said that, 30 to 40 numbers of people in his village will get employment through this quarry project and the quarry management has facilitated the road in his village for public utilization. He said that, they will not affected by the proposed quarry project and thus they welcome the quarry project.

**3. Thiru. Saravanan, Bagimanur Village:**

Thiru. Saravanan has said that, if the quarry is operated in such a way that there is no air pollution and dust emanation, there is no difficulty in working in the proposed quarry. He also said that, 20 to 30 numbers of people will get new employment opportunities through this proposed quarry project.

4. **Thiru. Chandrasekaran, Bagimanur Village:**

Thiru. Chandrasekaran has said that, there is no problem with this proposed quarry project and he welcomes the quarry project.

5. **Thiru. Raman, Bagimanur Village:**

Thiru. Raman has said that, the proposed quarry project will provide employment to the local people and thereby it will increase their livelihood.

6. **Thiru. Venugopal, NGO, Jolarpet:**

Thiru. Venugopal has said that, employment opportunities should be provided to the local people, medical camps should be conducted to conserve the health of the local people, schools and temples located in the area should be financially supported. Further, he said that protective gears like shoes, helmets etc. should be provided to the workers working in the quarry.

**The Deputy Collector, Krishnagiri :**

The Deputy Collector, Krishnagiri has asked the quarry management that, whether insurance scheme, medical camps, free check-ups, accommodation, canteen and transport were properly provided to the quarry workers. Also, have there been any accidents or casualties to the workers during the quarry operation so far? Is there a proper license to use explosives in the quarry?

**The Proponent of the Proposed Quarry Project:**

The Proponent of the Proposed Quarry Project has replied that, all the facilities like insurance scheme, medical camps, free check-ups, accommodation, canteen and transport have been provided to the workers working in the quarry and there has been no accident or loss of life in the quarry so far. He also said that, explosives are being used in the quarry with proper license.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer , Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, there are 16 number of petitions were received on the proposed projects of M/s. Everking Granites and M/s. Thiru.E. Jagadessan Grey Granite Quarry during public hearing meeting.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Grey Granite Quarry projects.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

01/11/2023

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

**Deputy Collector**
**Krishnagiri**

**District Collector**
**Krishnagiri**

5/7

1). தி/ள். எவர்கிங் கிரானைட்ஸ், ச. எண். 347/1, 347/2, 347/4, 347/5, 348/4, 348/5, 348/6B1, 348/6C & 348/6D1, ஜெகதேவிபாளையம் கிராமம், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப் பட்ட கிரே கிரானைட் குவாரி – 3.19.5 ஹெக்டர் பரப்பளவு மற்றும் 2) தி/ள். ஏ.ஜெகதீசன் கிரே கிரானைட் குவாரி, ச. எண். 353/2A1B, 2A7, 2B, 2C1 & 2E1A, ஜெகதேவிபாளையம் கிராமம், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட கிரே கிரானைட் குவாரி – 1.56.5 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள 2 எண்ணிக்கையிலான கூட்டு கிரே கிரானைட் கல் சுரங்கங்களை நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 26.10.2023 அன்று எண். 1/190, தே. நெ எண். 77, திருவண்ணாமலை மெயின் ரோடு, அஞ்சூர், பர்கூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். ஸ்ரீ மகேஷ்வரி மஹால், முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. S.சுந்தர ராஜன் | : | துணை ஆட்சியர், கிருஷ்ணகிரி மாவட்டம்.<br>(மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. R. வெங்கடேசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er.K. கணேசன் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | Er.T.செந்தில் குமார் | | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |

| | | | |
|---|---|---|---|
| 5 | திரு.ஜலாலுதின் | : | உரிமையாளர்<br>தி/ள். எவர்கிங் கிரானைட்ஸ் |
| 6 | திரு. ஜெகதீசன் | | உரிமையாளர்<br>தி/ள். ஏ.ஜெகதீசன் கிரே கிரானைட் குவாரி, |
| 5 | திரு. M. வெங்கடேஷ் பிரபு | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்<br>தி/ள். ஆதி பூமி மைனிங் & எண்விரோ டெக் பிரைவேட் லிமிடெட், சேலம். |
| | பொதுமக்கள் | : | 58 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

1). தி/ள். எவர்கிங் கிரானைட்ஸ் மற்றும் 2) தி/ள். ஏ.ஜெகதீசன் கிரே கிரானைட் குவாரி, ஆகிய 2 எண்ணிக்கையிலான கூட்டு கிரே கிரானைட் சுரங்கங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த துணை ஆட்சியர், கிருஷ்ணகிரி அவர்கள், பொதுமக்கள் மற்றும் 1). தி/ள். எவர்கிங் கிரானைட்ஸ் மற்றும் 2) தி/ள். ஏ.ஜெகதீசன் கிரே கிரானைட் குவாரி, ஆகிய 2 எண்ணிக்கையிலான கூட்டு கிரே கிரானைட் சுரங்கங்களின் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 22.09.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், தண்ணீர்பள்ளம், சீனிவாசபுரம், ஜெகதேவி, பாகிமனூர் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள கிரே கிரானைட் குவாரிகளின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் கிரே கிரானைட் குவாரிகளின் திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

துணை ஆட்சியர், கிருஷ்ணகிரி அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் 1). தி/ள். எவர்கிங் கிரானைட்ஸ் மற்றும் 2) தி/ள். ஏ.ஜெகதீசன் கிரே கிரானைட் குவாரி, திட்டங்களின் உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள கிரே கிரானைட் குவாரிகள் தொடர்பாக விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

1). தி/ள். எவர்கிங் கிரானைட்ஸ் மற்றும் 2) தி/ள். ஏ.ஜெகதீசன் கிரே கிரானைட் குவாரி நிறுவனங்களின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. M. வெங்கடேஷ் பிரபு, தி/ள். ஆதி பூமி மைனிங் & எண்விரோ டெக் பிரைவேட் லிமிடெட், சேலம் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று கிரே கிரானைட் குவாரிகளின் திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர்

மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திரு.முருகேசன், ஜெகதேவிபாளையம் கிராமம்:**

திரு. முருகேசன் அவர்கள், இத்திட்டம் வருவதால் எவ்வித பிரச்சனையும் இல்லை என்றும், இத்திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பு உருவாகும் என குறிப்பிட்டார்.

**2. திரு. தாமோதரன், பாகிமனூர் கிராமம்:**

திரு. தாமோதரன் அவர்கள், இக்குவாரி திட்டத்தின் மூலம் தங்களுடைய கிராமத்தில் உள்ள 30 முதல் 40 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் தங்களுடைய கிராமத்தில் குவாரி நிர்வாகத்தினர் சாலை வசதி செய்துள்ளதாக தெரிவித்தார். இக்குவாரி திட்டம் அமைவதால் தங்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்றும் மேலும் இக்குவாரி திட்டத்தினை தாங்கள் வரவேற்பதாகவும் கூறினார்.

**3. திரு. சரவணன், பாகிமனூர் கிராமம்:**

திரு. சரவணன் அவர்கள், குவாரியில் தூசு மற்றும் காற்று மாசு ஏற்படாத வகையில், குவாரியை இயக்கினால், குவாரியில் வேலை செய்வதில் சிரமம் இல்லை என்றார். மேலும், இக்குவாரி திட்டத்தின் மூலம் 20 முதல் 30 நபர்களுக்கு புதியதாக வேலை கிடைக்கப்பெறும் என்று கூறினார்.

**4. திரு. சந்திரசேகரன், பாகிமனூர் கிராமம்:**

திரு. சந்திரசேகரன் அவர்கள், இக்குவாரி வருவதில் தங்களுக்கு எவ்வித பிரச்சனையும் இல்லை என்று கூறினார். மேலும் இக்குவாரி திட்டத்தினை தாங்கள் வரவேற்பதாகவும் கூறினார்.

**5. இராமன், பாகிமனூர் கிராமம்:**

திரு. இராமன் அவர்கள், இக்குவாரி திட்டத்தின் மூலம் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமென்றும், அதன் மூலம் அவர்களின் வாழ்வதாரம் உயரும் என்று கூறினார்.

**6. திரு. வேணுகோபால், NGO, ஜோலார்பேட்டை:**

திரு. வேணுகோபால் அவர்கள், உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கவேண்டுமென்றும், மருந்துவ முகாம்கள் நடத்தி உள்ளூர் மக்களின் உடல் நலத்தை பாதுகாக்க வேண்டுமென்றும், உள்ளூரில் அமைந்துள்ள பள்ளி மற்றும் கோவில்களுக்கு நிதியுதவி வேண்டுமென்றும் கூறினார். குவாரியில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு காலணிகள், தலைகவசம் போன்ற பாதுகாப்பு உபகாரணங்களை வழங்கிட வேண்டும் என்று கூறினார் இறுதியாக இக்குவாரி திட்டத்திற்கு ஆதரவு அளிப்பதாக தெரிவித்தார்.

**துணை ஆட்சியர் அவர்கள்:**

துணை ஆட்சியர் அவர்கள் குவாரியில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குரிய காப்பீட்டு திட்டம், மருத்துவ முகாம்கள், இலவச பரிசோதனைகள், தங்கும் வசதி, உணவகம் மற்றும் போக்குவரத்து ஆகியன முறையாக வழங்கப்படுகிறதா என வினவினார். மேலும், இதுவரை குவாரி செயல்பாட்டின் போது தொழிலாளர்களுக்கு விபத்து, உயிர்சேதம் ஆகியன ஏற்பட்டுள்ளனவா ? என்றும் குவாரியில் வெடிகளை பயன்படுத்த முறையான உரிமம் உள்ளதா ? என வினவினார்.

**குவாரியின் உரிமையாளர்:**

குவாரியின் உரிமையாளர் அவர்கள், குவாரியில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு, காப்பீட்டு திட்டம், மருத்துவ முகாம்கள், இலவச பரிசோதனைகள், தங்கும் வசதி, உணவகம் மற்றும் போக்குவரத்து ஆகிய அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன என்றும், குவாரியில் இதுவரை எவ்வித விபத்து, உயிர்சேதம் ஆகியவை ஏற்படவில்லை என்றும் தெரிவித்தார். மேலும், முறையான உரிமம் பெற்று குவாரியில் வெடி பொருட்கள் பயன்படுத்த படுவதாக தெரிவித்தார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள 1). தி/ள். எவர்கிங் கிரானைட்ஸ் மற்றும் 2) தி/ள். ஏ.ஜெகதீசன் கிரே கிரானைட் குவாரி திட்டங்களின் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 16 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், 1). தி/ள். எவர்கிங் கிரானைட்ஸ் மற்றும் 2) தி/ள். ஏ.ஜெகதீசன் கிரே கிரானைட் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள கிரே கிரானைட் குவாரிகளின் திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்**<br>**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**<br>**ஓசூர்** | துணை ஆட்சியர்<br>கிருஷ்ணகிரி மாவட்டம் | **மாவட்ட ஆட்சியர்**<br>**கிருஷ்ணகிரி** |